# ஆண்டறிக்கை

# 2019

## ஹோமியோபதி மருத்துவ சபை

**சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு**

# பொருளடக்கம்

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | சுருக்கம் | 02 |
| 2. | முகவுரை | 03 |
| 3. | ஹோமியோபதி மருத்துவச் சபை | 04 |
| 4. | பின்புல விபரங்கள் | 05 |
| 5. | மருத்துவச் சபையின் நோக்கம் | 07 |
| 6. | மருத்துவச் சபையின் அதிகாரங்கள் | 08 |
| 7. | மருத்துவச் சபையின் அங்கத்தவர்கள் மற்றும் பதவிக்காலம் | 10 |
| 8. | நிறுவனத்தின் தகவல்கள் | 11 |
| 9. | ஹோமியோபதி மருத்துவச் சபையின் செயலாற்றுகை | 12 |
| 10. | வருடாந்த நிதி அறிக்கை | 21 |
| 11. | கணக்காய்வு அறிக்கை | |
| 12. | நல்வாழ்த்துக்கள் | |

# 01. சுருக்கம்

ஹோமியோபதி மருத்துவ சபையின் 2019ஆம் ஆண்டறிக்கை இதனூடாக சமர்ப்பிக்கப்படுகின்றது. இதனூடாக மருத்துவ சபையின் தொலைநோக்கு மற்றும் நோக்கத்திற்கு அமைவாக அதன் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

2019ஆம் ஆண்டு என்பது வருடம் முழுவதும் ஹோமியோபதி மருத்துவ சபையின் பணிப்பாளர் சபை நியமிக்கப்படாததனால் அதனுடைய வழிகாட்டலின் கீழ் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் போன போன வருடமாக அமைகின்றது.

2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க புதிய ஹோமியோபதி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட முதலாவது நிர்வாக சபையான இடைக்கால மருத்துவ சபையின் உத்தியோகபூர்வ காலம் 19.10.2018 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. எனினும் மருத்துவ சபைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டிருந்த CA/87/2013ஆம் இலக்க வழக்குத் தீர்ப்பின் ஊடாக மேலும் வியாப்பித்த நிறுவனத்தின் பிரச்சினைகளின் காரணமாக மருத்துவ சபையினை மீள நியமிப்பதில் சட்ட ரீதியான சிக்கல்கள் ஏற்பட்டது. அதனால் வழக்கின் தீர்ப்புக்கு எதிராக கௌரவ உயர் நீதிமன்றத்தில் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டுக்கான தீர்ப்பினை எதிர்பார்த்து இந்த வருடம் முடிவடைந்தது எனக் குறிப்பிட முடியும். அதனால் மருத்துவ சபையின் நடவடிக்கைகள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்டதுடன் அவை மருத்துவ சபையின் பதிவாளரினால் செயற்படுத்தப்பட்டன.

2019ஆம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவ சபையின் வரலாற்றில் மிக முக்கிய வருடமாக பதிவுசெய்ய வேண்டிய ஒரு ஆண்டாகும். ஹோமியோபதி மருத்துவ சபையினால் இது வரை நாடு முழுவதிலும் கொண்டு நடாத்தப்படும் சிகிச்சை நிலையங்கள் 7இற்கு மேலதிகமாக மேலும் 5 மாவட்டங்களில் புதிய சிகிச்சை நிலையங்களை ஆரம்பிப்பதற்கு இவ்வாண்டில் இயலுமானது. இதனூமாக ஹோமியோபதி சிகிச்சைக்காக நாட்டின் தொலைதூரத்தில் இருந்த பொது மக்களுக்கு வசதிகளை வழங்க முடிந்ததுடன் ஹோமியோபதி சிகிச்சை சேவையினை நாடு முழுவதிலும் மேலும் விரிவாக்குவதற்கு இயலுமானது. இதில் இன்னுமொரு முக்கியமான விடயம் மருத்து தொழில்துறையில் உள்ள மேலும் 07 மருத்துவர்களை அரச ஹோமியோபதி வைத்திய அலுவலர்களாக சேவையில் இணைத்துக் கொள்வதற்கான சந்தர்ப்பமும் கிடைத்தது. அதேபோல் புதிய 5 தொழிலாளர் பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள முடிந்தது.

# 02. முகவுரை

"**ஒத்ததை ஒத்தது குணப்படுத்தும்**" எனும் இயற்கையான நியதிக்கு அமைவாக கட்டியெழுப்பப்பட்ட மருத்துவ முறையாக ஹோமியோபதி மருத்துவ முறையினைக் குறிப்பிட முடியும். 18ஆம் நூற்றாண்டில் இந்த மருத்துவ முறையானது உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது மேற்கத்திய மருத்துவ நிபுணரான கிருஸ்டின் பெட்ரிக் சாமுவெல் ஹானிமான் என்பவராலாகும். இன்று விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் இணைந்து வளர்ச்சியுறும் ஹோமியோபதி மருத்துவ முறை பொதுமக்கள் சுகாதார சேவையினுள் முக்கியத்துவம் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. **தற்போது தேசிய மருத்துவ சேவையுடன் இணைந்து உலகளாவியரீதியில் பரவியுள்ள ஹோமியோபதி மருத்துவசாலைகள் மூலம் மருத்துவ சிகிச்சையை மக்களுக்கு வழங்குவதோடு மட்டுமல்லாமல் ஹோமியோபதி மருத்துவ பட்டங்களை வழங்கும் பல்கலைக்கழகங்கள்**இ **ஹோமியோபதி மருந்துகளை தயாரிக்கும் தொழிற்ச்சாலைகள்**இ **மற்றும் ஹோமியோபதி ஆராய்ச்சி நிலையங்கள் என்பவற்றுடன் இணைந்து செயலாற்றுவது குறிப்பிடத்தக்கது**.

1970ஆம் ஆண்டு 07ஆம் இலக்க ஹோமியோபதிச் சட்டத்தின் மூலம் முதன்முதலில் இலங்கை ஹோமியோபதி மருத்துவ சபை நிறுவப்பட்டதுடன், அது ஹோமியோபதி மருத்துவ முறையை இலங்கையினுள் நிறுவுதல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான பணிகளை மேற்கொண்டது. எனினும் அதில் எழுந்த சட்ட ரீதியான மற்றும் கட்டமைப்பு தடைகள் காரணமாக மருத்துவ சபை வீழ்ச்சியடைந்தது. எனினும், இந்த சவாலை எதிர்நோக்குவதற்காக பாராளுமன்றத்தினால் 2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க ஹோமியோபதி சட்டம் அங்கீகரிக்கப்பட்டது. இந்த புதிய சட்டத்தின் 1 ஆம் பிரிவின் 2ஆம் பந்திக்கு அமைவாக ஹோமியோபதி மருத்துவ சபையை மீண்டும் நிறுவுவதற்கான பணிகளை மேற்கொள்வதற்காக சட்டத்தின் 51ஆம் பந்திக்கு அமைவாக ஹோமியோபதி மருத்துவ சபையின் முதல் கட்டமாக ஹோமியோபதி இடைக்கால மருத்துவ சபையொன்று 2016ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கௌரவ அமைச்சரினால் நிறுவப்பட்ட ஹோமியோபதி இடைக்கால மருத்துவ சபையில் 04 ஹோமியோபதி மருத்துவர்களும் 06 அரச அலுவலர்களும் உள்ளடங்கியிருந்தனர். ஹோமியோபதி மருத்துவ சபையின் பதிவாளர், இந்த சபையின் செயலாளராவார்.

ஹோமியோபதி மருத்துவ சபையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக அதன் பணிகளின் கீழ் கொண்டுவரப்பட்ட ஹோமியோபதி மருத்துவ முறையை பொது மக்கள் சுகாதார சேவையாக அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் 07 மாவட்டங்களில் 07 ஹோமியோபதி மருத்துவ சிகிச்சை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவை நிறுவப்பட்டுள்ள இடங்கள் தெகிவளை, பரகட்டுவ, மொனராகலை, பாலமுனை, மாத்தளை, குருநாகல் மற்றும் தொலங்கமுவ ஆகும்.

2019ஆம் ஆண்டு மருத்துவ சபையினால் பராமரிக்கப்படும் அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்கள் மேலும் 05 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு ஒன்று எனும் அடிப்படையில் நிறுவப்பட்டது. அதன்படி இது வரை 07ஆகக் காணப்பட்ட அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்களின் எண்ணிக்கை 12 என உயர்வடைந்தது. அதன் படி பணிக்குழுவிற்கு மேலும் 10 ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள முடிந்தது.

# 03. ஹோமியோபதி மருத்துவ சபை

## தொலை நோக்கு

"ஹோமியோபதி மருத்துவ முறையினை தேசிய சுகாதார சேவை வரை மேம்படுத்துதல்"

## செயற்பணி

"ஹோமியோபதி மருத்துவ முறைக்கான மனிதவள மற்றும் பௌதீக வளங்களை மேம்படுத்துவதற்கான உரிய கொள்கைகளை வகுத்து, அதனை பொது மக்கள் இடையே பரப்புதல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்."

## நோக்கம்

2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் ஏற்பாடுகளின் படி ஹோமியோபதி துறையின் தொழில் கல்வி மற்றும் சுகாதார சேவை என்பற்றின் தரத்தினை மேம்படுத்தல் மற்றும் அறிவு, திறன், அனுபவம் உள்ளவர்களின் ஊடாக நோயாளிகளின் ஆரோக்கியத்தை உருவாக்குதல் மற்றும் ஆரோக்கியமான நபர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்தல் என்பவற்றுக்கு தொழில் அதிகாரத்தை பயன்படுத்துவதன் மூலம் தொழிலின் கௌரவம் மற்றும் தரத்தினைப் பாதுகாத்தல்.

# 04. பின்புல விபரங்கள்

ஹோமியோபதி மருத்துவச் சபை நியதிச்சட்ட நிறுவனமாகும். முதல் மருத்துவ சபை ஹோமியோபதி இடைக்கால மருத்துவ சபையாக 2016ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க ஹோமியோபதிச் சட்டத்தின் ஊடாக பெயரியப்பட்டதுடன், அதன் அங்கத்தவர்களை நியமிக்கும் அதிகாரம் கௌரவ அமைச்சருக்கு சாட்டப்பட்டுள்ளது. அதைத்தொடர்ந்து, உத்தியோகபூர்வ அரச அலுவலர்கள் மூவர், ஹோமியோபதி மருத்துவ தொழில்புரிபவர்களிடையே தேர்தல் வைக்கப்பட்டு அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐவர், ஹோமியோபதி மருத்துவர் இருவர் கட்டாயமாக உள்ளடங்கும் வகையில் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மூவரையும் உள்ளடக்கி 11 நபர்கள் அடங்கிய சபையொன்று அமைக்கப்படும். சட்டத்தின் கொள்கை மற்றும் ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்கான அதிகாரம் கௌரவ அமைச்சரிடம் உள்ளதுடன், உரிய துறை தொடர்பாக சட்டத்திற்கு அமைவாக ஒழுங்குவிதிகளைத் தயாரிக்கும் அதிகாரம் சபைக்கு சாட்டப்பட்டுள்ளது.

## சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள்

2016ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க ஹோமியோபதிச் சட்டத்தை அமுல்படுத்தும் திகதியில் அமுலிலிருந்த அனைத்து கட்டளைகளும், இந்தச் சட்டத்தின் கட்டளைகள் தயாரிக்கும் வரை, இந்த சட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கட்டளைகள் எனக் கருத்தப்படும். புதிய சட்டத்தின் கீழ் அவசியமாக ஒழுங்குவிதிகளைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றதனால், 1970ஆம் ஆண்டு 07ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின் கீழ் செயற்பட்ட அனைத்து கட்டளைகளும் அவ்வாறே செயற்படுத்தப்படும்.

## 1970ஆம் ஆண்டு 07ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்திற்கு அமைவாக வெளியிடப்பட்ட கட்டளைகள்

1. ஹோமியோபதி ஒழுங்குவிதிகள் - 1980
(மருத்துவதுறையைச் சேர்ந்தவர்களை பதிவுசெய்வதற்கான ஒழுங்குவிதிகள் மற்றும் ஹோமியோபதி மருந்து இறக்குமதி)
2. ஹோமியோபதி மருத்துவ சபையின் சட்டம் - 1981
3. ஹோமியோபதி மருத்துவ சபையின் தேர்தல் ஒழுங்குவிதிகள் - 1998

## ஹோமியோபதி மருத்துவ சபையை நிறுவுதல்

இந்த நாட்டில் முதன் முதலில் ஹோமியோபதி மருத்துவ சபை, 1970ஆம் ஆண்டு 07ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்திற்கு அமைவாக, 1979ஆம் ஆண்டு விடயத்திற்கு பொறுப்பாக இருந்த அமைச்சரினால் நிறுவப்பட்டது. 5 வருடங்களுக்கு ஒருமுறை மருத்துவ தொழில்புரிபவர்களுக்கிடையில் தேர்தல் வைக்கப்பட்டு (முதலாவது மருத்துவ சபை தவிர்ந்த) நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், தொடர்ந்தும் மருத்துவ சபை நியமிக்கப்படவில்லை. 1979ஆம் ஆண்டிற்கு பின்னர் இரண்டாவது மருத்துவ சபை 1998ஆம் ஆண்டும் மூன்றாவது மருத்துவ சபை 2006ஆம் ஆண்டும் நியமிக்கப்பட்டதுடன், அதன் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் மூன்றாவதாக நியமிக்கப்பட்ட மருத்துவ சபை 2009ஆம் ஆண்டு அதன் காலம் முடிவடைவதற்கு முன்னர் கலைக்கப்பட்டு அடுத்த இரு வருடங்களுக்கு புதிய சபை நிறுவப்பட்டது.

அதன் உத்தியோகபூர்வ காலம் 2011 ஜனவரி 30ஆம் திகதி முடிவடைந்தது. அதுவரை காணப்பட்ட ஹோமியோபதி சட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கி புதிய சட்டம் கொண்டுவரும் வரை மருத்துவ சபையின் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் கௌரவ அமைச்சர் அல்லது அமைச்சின் செயலாளரினால் ஹோமியோபதி இடைக்கால நிர்வாக சபை நிறுவப்பட்டது. 2011 ஜுன் 16ஆம் ஆண்டிலிருந்து 2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க புதிய ஹோமியொபதி சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட 2016 ஜுலை 29ஆம் திகதி வரை ஹோமியோபதி மருத்துவ சபையின் நடவடிக்கைகள் இடைக்கால நிர்வாக சபையினால் நிறுவப்பட்டது. இவ்வாறு நியமிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக சபையில் 05 அங்கத்தவர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தனர். இந்தக்காலம் முழுவதிலும் ஹோமியோபதி மருத்துவர்களின் தொழில்நுட்பக் குழுவின் ஆதாரவு ஹோமியோபதி இடைக்கால நிர்வாகக் குழுவிற்கு வழங்கப்பட்டது.

## ஹோமியோபதி இடைக்கால சபை

2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க ஹோமியொபதி சட்டம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், 2016 ஒக்டோபர் 21ஆம் திகதி சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சரினால் சட்டத்தின் மூலம் அவருக்களிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் ஊடாக ஹோமியோபதி இடைக்கால நிர்வாக சபை நிறுவப்பட்டது. சட்டத்திற்கு அமைவாக முதலில் நிறுவப்பட்டது ஹோமியோபதி இடைக்கால சபையாகும். இதன் உத்தியோகபூர்வ காலம் இரண்டு வருடங்களாகும். சட்டத்தை அமுல்படுத்துவதற்கு அவசியமான கட்டளைகளை தயாரிப்பதற்கு அவசியமான ஆரம்ப வரைவுகளை தயாரித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் இந்த சபையின் முதற்பணியாக கருதப்படுகின்றது. அதற்கமைவாக சட்டத்திற்கு அவசியமான ஒழுங்குவிதிகள், வைத்தியர்களைப் பதிவு செய்வதற்கான ஒழுங்குவிதிகள். ஹோமியோபதி மருந்துகளின் இறக்குமதி, விநியோகம் மற்றும் தயாரிப்பு என்பதற்கான ஒழுங்குவிதிகள், ஹோமியோபதி மருத்துவப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கான ஒழுங்குவிதிகள் மற்றும் சட்டத்தின் 30ஆம் பந்திக்கு அமைவாக நடாத்தப்பட வேண்டிய பரீட்சைகளுக்கான ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கான வரைவு தயாரிக்கப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அத்துடன், இந்த சபையின் தலைவரான டாக்டர் சிந்தன வீரசேகர அவர்களினால் ஹோமியோபதி திணைக்களத்திற்கான முன்வரைவும் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த இடைக்கால சபையின் நியமனக் காலம் 19 ஒக்டோபர் 2018ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது.

# 05. மருத்துவ சபையின் நோக்கம

2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்திற்கு அமைவாக ஹோமியொபதி மருத்துவ சபையின் நோக்கங்கள் கீழ்வருமாறு அமையும்.

1. ஹோமியோபதி மருத்துவத் தொழிலில் ஈடுபடுவதை ஊக்குவித்தல், அபிவிருத்தி செய்தல், ஒழுங்குமுறைப்படுத்தல்;
2. ஹோமியோபதி மருத்துவமுறைக்கு அமைவாக பொது மக்கள் சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் சமூகத்தினுள் ஹோமியோபதி வைத்தியமுறையை ஊக்குவித்தல்;
3. ஹோமியோபதி மருத்துவமுறையை கற்கைசெய்தல், ஆராய்ச்சி செய்தல் மற்றும் ஹோமியோபதி மருத்துவத் தொழிலில் ஈடுபடுதல், அதனை மேம்படுத்துதல் மற்றும்;
4. ஹோமியோபதி நிறுவனத்தை நிறுவி கொண்டு நடாத்துதல்.
5. அரச ஹோமியோபதி மருத்துவசாலைகள் தவிர்ந்த ஹோமியோபதி மருத்துவமுறைக்கு அமைவாக சிகிச்சைகளை வழங்கும் நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்;
6. ஹோமியோபதி மருந்து வகைகள், ஔடதங்கள் மற்றும் ஏனையவற்றைத் தயாரித்தல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் விநியோகித்தலை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல்.

# 06. மருத்துவ சபையின் அதிகாரங்கள்

சட்டத்தின் 16ஆம் பந்திக்கு அமைவாக கீழ்வரும் அதிகாரங்கள் ஹோமியோபதி மருத்துவ சபைக்குரியது ஆகும்.

01) ஹோமியோபதி மருத்துவத் தொழில்புரிபவர்கள், ஹோமியோதி மருந்து கலப்பவர்கள், ஹோமியோபதி தாதிகள் மற்றும் ஹோமியோபதி நிறுவனங்களை பதிவுசெய்தல்;

02) ஹோமியோபதி மருத்துவ தொழில்புரிபவர்கள் பெற்றிருக்கும் கல்வித்தகைமைகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல்;

03) ஹோமியோபதி மருத்துவ தொழில்புரிபவர்களுக்கு தகைமைகளை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து அது பற்றிய சான்றிதழை உறுதிப்படுத்திக்கொள்ளல்;

04) ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி அல்லது நிறுவனத்தை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு பரீட்சையாளர்களை நியமித்தல்;

05) ஹோமியோபதி மருத்துவ முறைக்கு அமைவாக சிகிச்சை சேவைகளை வழங்குதல்;

06) ஹோமியோபதி நிறுவனத்தை நிறுவுதல், கொண்டு நடாத்துதல் மற்றும் பட்டதாரி கற்கை பாடநெறிகளைத் தயாரித்தல் ;

07) ஹோமியோபதி மருந்து ஏற்றுமதி மற்றும் இறக்குமதி;

08) ஹோமியோபதி மருந்தினை விஞ்ஞான ரீதியாக தயாரித்தல் மற்றும் ஊக்குவித்தல்;

09) ஹோமியோபதி மருத்துவ வசதிகள், உபகரணங்கள், பாடநெறி மற்றும் பரீட்சைகள் தொடர்பாக குறைந்தபட்ச தரத்தினை குறித்துரைத்தல் மற்றும் பேணுதல்;

10) ஹோமியோபதி விடயங்களைக் கற்கும் மாணவர்களுக்கு ஏனைய வசதிகளை வழங்குதல், ஹோமியோபதி ஆராய்ச்சி நிறுவனத்தை மேம்படுத்தல், அவசிய நிறுவனம் மற்றும் நபர்களுக்கு நிதி உதவிகள் அல்லது வேறு உதவிகளை வழங்குதல்;

11) பட்டப்பின் படிப்பு ஹோமியோபதி மருத்துவ கல்வி தொடர்பாக மருத்துவ கல்விக்கு குறைந்தபட்ச தரத்தினை விதித்தல் மற்றும் பேணுதல்;

12) ஹோமியோபதி மருத்துவ முறைக்கு ஏற்றவகையில் பொது மக்கள் சேவையை மேம்படுத்தல்;

13) மருத்துவ கல்வி தொடர்பான பட்டம் மற்றும் ஏனைய கல்விகளை வழங்குதல் தொடர்பாக உயர் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து பணிபுரிதல்;

14) 1978ஆம் ஆண்டு 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்திற்கு அமைவாக ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியை நிறுவுவது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்;

15) சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான குழுக்களை அமைச்சரவை அனுமதியுடன் நிறுவுதல்;

16) அலுவலர்களுக்கு அல்லது குழுக்களுக்கு அதிகாரங்களை வழங்குதல்;

17) சபையின் அதிகாரங்கள். பணிகள் மற்றும் செயல்களை மேற்கொள்ளுதல் மற்றும் நிறைவேற்றுவதற்கு ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல்;

18) சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் நிறைவேற்றுதல்.

# 07. மருத்துவ சபையின் அங்கத்தவர்கள் மற்றும் பதவிக்காலம்

2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்திற்கு அமைவாக மருத்துவ சபையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை தலைவர் உள்ளடங்களாக 11 ஆகும். உத்தியோபூர்வமாக நியமிக்கப்பட்ட அமைச்சின் சிரேஸ்ட அலுவலர், திறைசேரி அலுவலர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதி உள்ளடங்கலாக மூன்று அரச அலுவலர்களும், ஹோமியோபதி மருத்துவ தொழில்புரிபவர்களுக்கிடையில் தேர்தல் நடாத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து நபர்கள் கட்டாயமாக உள்ளடங்கும் வகையிலும், கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மூன்ற நபர்களையும் உள்ளடக்கி 11 அங்கத்தவர்கள் நியமிக்கப்படுவர். மருத்துவ சபையின் செயலாளர் / பதிவாளர் கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்துடன் சபையினால் நியமிக்கப்படுவார். சபை மூன்று வருடங்களுக்கு நியமிக்கப்படுவதுடன், பதிவாளர் ஐந்து வருடங்களுக்கு நியமிக்கப்படுவார்.

# 08. நிறுவனத்தின் தகவல்கள்

| | | |
|---|---|---|
| **நிறுவனத்தின் பெயர்** | :- | ஹோமியோபதி மருத்துவ சபை |
| **முகவரி** | :- | இலக்கம் 94, ஷெல்டன் ஜயசிங்க மாவத்தை,<br>வெலிசறை,<br>இராகம. |
| **தொலைபேசி இலக்கம** | :- | 011-2958175 |
| **தொலைநகல்** | :- | 011-2958175 |
| **மின்னஞ்சல்** | :- | homosri.mcouncil@gmail.com |
| **கூட்டிணைக்கப்பட்ட நிறுவனத்தின் நிலை** | :- | 2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்கச் சட்டத்தின் 15,16 மற்றும் 17ஆம் பிரிவுகளுக்கு அமைவாக நோக்கம் மற்றும் இலக்கு என்பவற்றுடன் ஹோமியோபதி மருத்துவ சபை நிறுவப்பட்டுள்ளது. |
| **நிர்வாகக் கட்டமைப்பு** | :- | செயலாளர்/ பதிவாளர்<br>பணிக்குப் பொறுப்பான மருத்துவர்கள்<br>முகாமைத்துவ உதவியாளர்கள்<br>மருந்து கலப்பவர்கள்<br>அலுவலக உதவியாளர்கள் |
| **வங்கி** | :- | இலங்கை வங்கி – தப்ரபோன் கிளை,<br>கொழும்பு 01.<br>கொமர்ஷல் வங்கி – ஜா-எல கிளை |

# 09. ஹோமியோபதி மருத்துவ சபையின் செயற்பாடுகள்

2016ஆம் ஆண்டு 10ஆம் இலக்க புதிய ஹோமியோபதி சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட முதலாவது நிர்வாக சபையான இடைக்கால மருத்துவ சபையின் உத்தியோகபூர்வ காலம் முடிவடைந்ததன் பின்னர் இரண்டாவது ஹோமியோபதி மருத்துவ சபை நியமிக்கப்படி வேண்டியிருந்த போதிலும், 2018 டிசம்பர் 31 வரை அதனை நியமிப்பதற்கு இயலாமல் போனது. ஹோமியோபதி மருத்துவ சபையினை நியமிப்பதற்கான உத்தியோகபூர்வ அனவல் அதனுடைய சமாந்தர அமைச்சினால் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்டதுடன் CA/87/2013ஆம் இலக்க வழக்குத் தீர்ப்பின் ஊடாக முன்னர் இருந்த ஹோமியோபதி இடைக்கால சபையின் நியமனம் மற்றும் அதன் தீர்மானங்கைள இரத்துசெய்து வழங்கிய தீர்ப்பின் ஊடாக மருத்துவ சபையினை மீள நியமிப்பதற்கு முடியாமல் போனதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

இந்த நிலமையின் கீழ் ஹோமியோபதி மருத்துவ சபை நடைமுறையின் செயற்படாத வருடமாக குறிப்பிட முடியும். அதன்படி மருத்துவ சபையின் செயற்பாடுகள் சுகாதார மற்றும் சுதேச வைத்திய சேவை அமைச்சின் சுதேச வைத்தியப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி முன்னைய மருத்துவ சபையினால் வழங்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாகவும் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாகவும் மருத்துவ சபை நடாத்தப்பட்ட ஆண்டாக இவ்வாண்டு கருதப்படுதல் வேண்டும். அதனால், வைத்தியர்களை பதிவுசெய்தல் உள்ளடங்களாக வைத்திய சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அனைத்து விடயங்களும் முற்றுமுழுதாக செயலிழந்த வருடமாக இவ்வருடத்தினைக் குறிப்பிட முடியும்.

## 1. அரச ஹோமியோபதி சிகிச்சையிலையங்களின் செயலாற்றுகை மற்றும் முகாமைத்துவம்

### 1.1 அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்களின் செயலாற்றுகை.

ஹோமியோபதி மருத்துவ சபையினால் கொண்டு நடாத்தப்படும் அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்களுக்கு மேலதிகமாக 5 மாவட்டங்களில் புதிய ஹோமியோபதி சிகிச்சை நிலையங்கள் இந்தவருடம் ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஹம்பாந்தோட்டை, புத்தளம், மட்டக்களப்பு, களுத்துறை மற்றும் நுவரேலியா மாவட்டங்களில் புதிய ஹோமியோபதி சிகிச்சை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டது.

அதற்கமைவாக 2019ஆம் ஆண்டு முழுவதிலும் அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்கள் 07இற்கு வருகை தந்த நோயாளிகளின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டள்ளது.

| சிகிச்சை நிலையத்தின் பெயர் | வருகை தந்த நோயாளிகளின் எண்ணிக்கை |
|---|---|
| மொனராகலை | 5,073 |
| தெகிவளை | 18,829 |
| மாத்தளை | 10,350 |
| தொலங்கமுவ | 19,888 |
| குருநாகல் | 12,795 |
| பரகடுவ | 13,688 |
| பாலமுனை | 7,770 |
| கொத்மலை | 11,202 |
| அம்பலாந்தோட்டை | 5,419 |
| இங்கிரிய | 2,935 |
| மட்டக்களப்பு | 2,752 |
| புத்தளம் | 7,169 |
| **மொத்தம்** | **117,870** |

### 1.2 அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்களின் முகாமைத்துவம்

ஹோமியோபதி மருத்துவ முறையை பொது மக்களுக்கான சுகாதார சேவையாக ஊக்குவிக்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு கொண்டு நடாத்தப்படும் ஹோமியோபதி சிகிச்சை நிலையங்கள், இந்த 12 வருடங்களில் இங்கு வருகை தரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து, நாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் நிறுவன முறைமையாக வளர்ந்துள்ளது. 2019ஆம் ஆண்டாகும் போது இந்த சிகிச்சை நிலையங்களில் ஹோமியோபதி சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து பத்தாயிரத்தை தாண்டியுள்ளது. இவ் வருடத்தினுள் மேற்குறிப்பிட்ட சிகிச்சை முகாமைத்துவத்திற்கு வசதிகளை வழங்குவதற்கு மருத்துவ சபை நடவடிக்கைகளை எடுத்தது. அதன் கீழ், பணியாட்குழுவின் பராமரிப்பு, கட்டட வசதிகளை வழங்குதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் மருந்துகளை வழங்கல், சிகிச்சை நிலையங்களுக்கான உபகரணங்களை வழங்குதல், சிகிச்சை நிலையங்களுக்கு நீர் மின்சாரம் மற்றும் துப்பரவு சேவைகளை வழங்கல் என்பன மேற்கொள்ளப்பட்டது.

## 02. ஹோமியோபதி நடமாடும் சிகிச்சை சேவைகள்

### 2.1 வெலிசர ஹோமியோபதி மருத்துவச் சபை ஹோமியோபதி வைத்தியசாலையுடன் இணைந்து ஒழுங்குசெய்த நடமாடும் சிகிச்சை முகாம்கள் மற்றும் கருத்தரங்குகள்

ஹோமியோபதி மருத்துவ முறையை பொது மக்களிடையே பிரபல்யப்படுத்தும் நோக்கத்துடன், ஹோமியோபதி மருத்துவ சபையினால், நடமாடும் சிகிச்சை முகாம்கள் மற்றும் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன. இந்த வருடத்தினுள் நடமாடும் சேவையை மேற்கொள்வதற்கு போதிய மருந்துகள் ஹோமியோபதி வைத்தியசாலையில் இல்லாமையினால், வருடத்தின் முதல் மாதங்களில் மட்டும் இவை நடாத்தப்பட்டன.. இதன் கீழ் 05 சிகிச்சை முகாம்களும் 05 கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டன.

| தொ.இல | திகதி | கருத்தரங்கு | நோயாளிகளின் வருகை | | |
|---|---|---|---|---|---|
| | | | பெண் | ஆண் | மொத்தம் |
| 01. | 2019.02.15 | சுதேச மருத்துவப் பிரிவு | 35 | 19 | 54 |
| 02. | 2019.04.20 | பெரியமுல்ல | 69 | 23 | 92 |
| 03. | 2019.05.25 | களுத்துறை தெற்கு விஸ்வ சிறுவர் சங்கம் | 65 | 16 | 81 |
| 04. | 2019.06.13 | ரம்புக்கன பிரதேச செயலகம் | 53 | 25 | 78 |
| 05. | 2019.06.23 | வெலிசர, பலபிட்டிய | 53 | 35 | 88 |
| மொத்தம் | | | | | **393** |

## 2.2 அரசின் ஹோமியோபதி சிகிச்சை நிலையங்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்கு மற்றும் நடமாடும் முகாம்கள்.

ஹோமியோபதி மருத்துவ சபையினால் கொண்டு நடாத்தப்படும் அரச ஹோமியோபதி நிலையங்களினாலும் ஹோமியோபதி மருத்துவ முறையினை மக்களிடையே பிரபல்யப்படுத்தும் நோக்கத்துடன், நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தது. அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சியளித்தல் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் நடமாடும் முகாம்கள் என்பன இதற்குரிய நிகழ்ச்சிகள் ஆகும்.

இந்த முகாம்களின் ஊடாக ஹோமியோபதி சிகிச்சையாளர்கள் மற்றும் குணப்படுத்தப்பட்டவர்கள் அவர்களின் பகுதியில் உள்ள அவர்களின் பிரதேசத்தில் உள்ள சமூக அமைப்புகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த திட்டங்களுக்கு கூடுதல் அரசாங்க நிதியுதவி இல்லை என்பதுடன், மேலும் சமூகத்தில் ஹோமியோபதி சிகிச்சையின் வெற்றியை ஊக்குவிப்பதில் சமூகத்தின் ஆர்வத்தையும் அர்ப்பணிப்பையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பதையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

### 2.2.1 தெஹிவளை அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையத்தின் ஊடாக நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகள்.

**அ.** தெகிவளை-கல்கிஸ்ஸ நகரசபையினா ஊடாக ஒழுங்கு செய்யப்பட்ட ‘‘புரபதி சரிசர’’ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட கருத்தரங்குகள் மற்றும் நடமாடும் முகாம்கள்

| தொ.இல | திகதி | இடம் | நோயாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | 2019.01.12 | இரத்தமலானை ஜயசுமனாராம விகாரை | 40 |
| 02. | 2019.06.29 | தெகிவளை கிறிஸ்துதேவ வித்தியாலளம் | 60 |
| 03. | 2019.09.21 | இரத்மலானை கோல்டன் லயன் சுபர் கிளப் வளாகம் | 68 |
| | | மொத்தம் | **168** |

**ஆ.** இந்த நிலையத்தினால் நடாத்தப்பட்ட “சுவ யாத்ரா” சமூக சிகிச்சையளிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடாத்தப்பட்ட கருத்தரங்குகள் மற்றும் நடமாடும் முகாம்கள்

| தொ.இல | திகதி | இடம் | நோயாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | 2019.03.20 | திகன ரிசோட் வளாகம் | 204 |
| 02. | 2019.12.11 | குருந்துகஹ, அல்பிட்டிய ஜயபிம ஒய்வு வளாகம் | 180 |
| மொத்தம் | | | **384** |

**2.2.2** · குருவிட்ட – பரகடுவ அரச ஹோமியோபதி நிலையத்தினால் நடாத்தப்பட்ட கருத்தரங்குகள் மற்றும் நடமாடும் முகாம்கள்

| தொ.இல | திகதி | இடம் | நோயாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | 2019.01.18 | நாகலந்த கங்காராம விகாரை வளாகம் | 40 |
| 02. | 2019.02.22 | குருவிட்ட தோட்ட ஸ்ரீ அபினவாரம விகாரை வளாகம் | 46 |
| 03. | 2019.04.22 | பன்னிப்பிட்டிய தர்மபால வித்தியாலயம் | 58 |
| மொத்தம் | | | **144** |

**2.2.3** மொனராகலை அரச ஹோமியோபதி நிலையத்தினால் நடாத்தப்பட்ட கருத்தரங்குகள் மற்றும் நடமாடும் முகாம்கள்

| தொ.இல | திகதி | இடம் | நோயாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | 2019.07.20 | பஸ்ஸர யூரிவத்த | 162 |
| 02. | 2019.06.08 | லூனுகல சுடாவத்த | 120 |
| மொத்தம் | | | **282** |

**2.2.4** இங்கிரிய அரச ஹோமியோபதி நிலையத்தினால் நடாத்தப்பட்ட கருத்தரங்குகள் மற்றும் நடமாடும் முகாம்கள்

| தொ.இல | திகதி | இடம் | நோயாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | 2019.10.02 | கிழக்கு - இங்கிரிய, 20 ஏக்கர் கிராமம் | 76 |
| மொத்தம் | | | **76** |

## 03. ஹோமியோபதி மருத்துவ முறை பற்றிய ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள்.

தெகிவளை சிகிச்சை நிலைய பணிப்பொறுப்பு வைத்திய அலுவலர் டாக்டர்.திருமதி.அனுஷா ஹேமகுமாரவினால் இந்த வருடத்தினுள் பல ஊடக நிகழ்ச்சிகள் பொது மக்களுக்கு நடாத்தப்பட்டது. அவை கீழ்வருமாறு,

**பத்திரிகைக் கட்டுரைகள்**

**01.** **இசிவர பத்திரிகை**

- 2019 ஜனவரி - கீழ்பாதம் நோவதற்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 பெப்பரவரி - குடலெரிவுக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 மார்ச் - தளர்சிக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 ஏப்பிரல் - குதிக்கால் பாத வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 மே - முதுகு வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 ஜூன் - முதுகு வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 ஜூலை - தோள்பட்டை வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 ஒகஸ்ட் - எழும்பு கரையாமல் பாதுகாப்பதற்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 செப்டெம்பர் - மூலநோய்க்கு ஹோமியோபதி சிகிச்சை
- 2019 ஒக்டோபர் - முடக்கு வாதத்திற்கான நோய்க்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 நவம்பர் - நரம்பு முடிச்சு உருவாதலைத் தடுப்பதற்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 டிசம்பர் - டெங்கு நோய்கான ஹோமியோபதி சிகிச்சை

**02.** **தருணிப் பத்திரிகை**

- 2019 ஜனவரி - முதுகு வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 பெப்பரவரி - நரம்பு முடிச்சு உருவாதலைத் தடுப்பதற்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 மார்ச் - முதுகு வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 மே - கீழ்பாதம் நோவதற்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 ஜூன் - மூச்சிழைப்பு நோய்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 ஜூலை - டெங்கு நோய்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 ஒகஸ்ட் - குதிக்கால் பாத வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 ஒக்டோபர் - பாக்கின்ஸன் வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 நவம்பர் - மூலநோய்க்கு ஹோமியோபதி சிகிச்சை
- 2019 டிசம்பர் - கல்லாணி நோய்கான ஹோமியோபதி சிகிச்சை

## 03. லக்பிம

- 2019 பெப்பரவரி - பாக்கின்ஸன் வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 ஜுன் - குதிக்கால் வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை

## 04.ஹிரு ரச
## Online Magazine

- 2019 ஒகஸ்ட் - முதுகு வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 செப்டெம்பர் - குடலெரிவுக்கான ஹோமியோபதி சிகிச்சை

## 05.ரஜினா

- 2019 ஒக்டோபர் 20 - பாக்கின்ஸன் வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை

## 06. திவயின (திங்கள்)

- 2019.01.07 - குதிக்கால் வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019.03.11 - எழும்பு கரையாமல் பாதுகாப்பதற்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019.04.02 - குடலெரிவுக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019.05.27 - கீழ்பாதம் நோவதற்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019.06.10 - இழந்த சமநிலையை மீளப்பெறுவதற்கான சிகிச்சை
- 2019.07.08 - செலியுலயிடிஸ் நோய்க்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019.08.26 - தோள்பட்டை வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019.09.23 - கழுத்து வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019.10.21 - மூலநோய்க்கு ஹோமியோபதி சிகிச்சை
- 2019.12.02 - நீரிழிவு நோய்க்கு ஹோமியோபதி சிகிச்சை

## 07. திவயின (ஞாயிறு)

- 2019.05.05 - வலிப்பு நோய்க்கு ஹோமியோபதி சிகிச்சை

## 08. டாக்டர் மாத சஞ்சிகை

- 2019 ஜனவரி - செலியுலயிடிஸ் நோய்க்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 பெப்பரவரி - குதிக்கால் வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 மார்ச் - சிறுநீர் தானாக கழிவது ஏன்
- 2019 ஏப்பிரல் - பாக்கின்ஸன் வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 மே - கை மற்றும் பாத வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 ஜுன் - குடலெரிவுக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 ஜுலை - தலைவலி, ஒற்றைத்தலைவலிக்கு ஹோமியோபதி சிகிச்சை
- 2019 ஒகஸ்ட் - முதுகு வலிக்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 செப்டெம்பர் - மூச்சிழைப்பு நோய்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 ஒக்டோபர் - எழும்பு கரையாமல் பாதுகாப்பதற்கான ஹோமியோபதி சிகிச்சை
- 2019 நவம்பர் - நீரிழிவு நோய்க்கு ஹோமியோபதி சிகிச்சை
- 2019 டிசம்பர் - முடக்கு வாதத்திற்கான நோய்க்கான ஹோமியோபதி சிகிச்சை

**வானொலி நிகழ்ச்சிகள் V FM**

- 2019 பெப்பரவரி 6 - ஹோமியோபதி சிகிச்சை முறை பற்றிய அறிமுகம்

**தொலைக்காட்சி நிகழ்ச்சி**

**01. சியத டீவி – பியும்வில நேரடி நிகழ்சி.**

2019.01.11 - சொத்தியான கால் பற்றிய ஹோமியோபதி கலந்துரையாடல்

2019.02.08 - பாக்கின்ஸன் நோய்பற்றிய ஹோமியோபதி கலந்துரையாடல்

2019.03.08 - பாக்கின்ஸன் நோய்பற்றிய ஹோமியோபதி கலந்துரையாடல்

2019.04.05 - வயிற்றில் எரிச்சல், குடலெரிவு நோய் பற்றிய ஹோமியோபதி கலந்துரையாடல்

2019.05.10 - பரு பற்றிய ஹோமியோபதி கலந்துரையாடல

2019.06.14 - முதுகு வலி பற்றிய ஹோமியோபதி கலந்துரையாடல

## **02.** தேசிய தொலைக்காட்சி – நுகசெவன நேரடி ஒளிபரப்பு

- 2019.06.27 - பாக்கின்ஸன் நோய்பற்றிய ஹோமியோபதி கலந்துரையாடல்
- 2019.07.25 - குதிக்கால் வலிக்கான ஹோமியோபதி கலந்துரையாடல்
- 2019.08.22 - மூலநோய்க்கு ஹோமியோபதி கலந்துரையாடல்
- 2019.09.26 - முடக்கு வாதத்திற்கான நோய்க்கான ஹோமியோபதி கலந்துரையாடல்
- 2019.10.24 - பக்கவாதத்திற்கான ஹோமியோபதி கலந்துரையாடல்
- 2019.11.28 - குடல் இறக்கத்திற்கான ஹோமியோபதி கலந்துரையாடல்

## **03.** சிரச தொலைக்காட்சி – வாழ்க்கைக்கு இடம்தரும் நிகழ்ச்சித்திட்டம்

- 2019.06.21 - முதுகு வலிக்கான ஹோமியோபதி கலந்துரையாடல்

<u>**விசேட சந்தர்ப்பம்**</u>

**ஹோமியோபதி வைத்தியரான அனுஷா ஹேமகுமார அவர்கள் 10.09.2019ஆம் திகதி பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் “ දිරිය කාන්තාභිමානී” விருதினைப் பெற்றுக்கொண்டார்.**

## **04.** அரச ஹோமியோபதி புதிய சிகிச்சை நிலையங்களை ஆரம்பித்தல்

2019ஆம் ஆண்டு 5 மாவட்டங்களில் புதிய அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை இருந்த அரச ஹோமியோபதி சிகிச்சை நிலையங்கள் 7ற்கு மேலதிகமாக 5 நிலையங்கள் இணைக்கப்பட்டமை இலங்கை ஹோமியோபதி வரலாற்றில் முக்கிய ஒரு வருடமாக பதிவுசெய்யக்கூடிய ஒரு நிகழ்வாகும்.

| தொ.இல | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| 01. | புத்தளம் | புத்தளம் M.O.H கட்டடம் |
| 02. | ஹம்பாந்தோட்டை | அம்பலாந்தோட்டை பிரதேச செயலக ஹம்பாந்தோட்டை காரியாலய வளாகம் |
| 03. | நுவரேலியா | கொத்மலை புதிய பிரதேச செயலக ஹம்பாந்தோட்டை காரியாலய வளாகம் |
| 04. | மட்டக்களப்பு | மூதாய் வீதி, புளியந்தீவு |
| 05. | களுத்துறை | வெளிநாட்டு நட்பு, மஹா இங்கிரிய |

## 05. வைத்திய அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்களை புதிய சிகிச்சை நிலையங்களுக்கு இணைத்தல்.

புதிய சிகிச்சை நிலையங்களுக்கு நேர்முகத் தேர்வு மூலம் தேரந்தெடுக்கப்பட்ட பட்டதாரி மற்றும் டிப்ளோமாதாரி வைத்தியர்கள் 6 பேர் வைத்திய அலுவலர் பதவிக்கு இந்த வருடத்தினுள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். அதேபோல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேருக்கு புதிய சிகிச்சை நிலையங்களில் தொழிலாளர் பதவி வழங்கப்பட்டது.

இந்த நியமனத்தை வழங்கியதன் ஊடாக ஹோமியோபதி வைத்திய சபைப் பணியாளர்களின் எண்ணிக்கை 38ஆக உயர்வடைந்தது. எனினும் கொத்மலை சிகிச்சை நிலையத்திற்கு பொறுப்பாக இருந்த வைத்திய அலுவலர் அமெரிக்காவின் குடியுரிமை கிடைக்கப்பெற்றதனால் பதவியில் இருந்து விலகியதனால் பணியாளர்களின் எண்ணிக்கை 37ஆக மாறியது.

## 06. மருந்து இறக்குமதிக்கு அனுமதிப்பத்திரத்தை வழங்குதல்

ஹோமியோபதி மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு கீழ்வரும் வைத்தியர்களுக்கும் நிறுவனங்களுக்கும் டொலர் 68344.395 மற்றும் யூரோ 1435.53 பெறுமதியுடைய இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் 17 விதப்புரை செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| **I.** | Dr. W.D.N Leetus | - | | **€ 1035.53** |
| **II.** | Dr. W.D.N Leetus | - | **$ 7014.22** | |
| **III.** | Dr. W.D.N Leetus | - | **$ 8166.18** | |
| **IV.** | Dr. S.P Pathirage | - | **$ 2923.60** | |
| **V.** | Dr. W.D.N Leetus | - | **$ 1399.72** | |
| **VI.** | Dr. W.D.N Leetus | - | **$ 1481.75** | |
| **VII.** | Dr. Anusha Priyangani | - | | **€ 400.00** |
| **VIII.** | Dr. W.D.N Leetus | - | **$ 3153.50** | |
| **IX.** | Dr. N.H.S Manel | - | **$ 1175.08** | |
| **X.** | Dr. W.D.N Leetus | - | **$ 5461.60** | |
| **XI.** | Dr. W.D.N Leetus | - | **$ 5966.555** | |
| **XII.** | Dr. W.D.N Leetus | - | **$ 2900.00** | |
| **XIII.** | Dr. W.D.N Leetus | - | **$ 1621.60** | |
| **XIV.** | Dr. W.D.N Leetus | - | **$ 1599.76** | |
| **XV.** | Dr. W.D.N Leetus | - | **$ 2019.05** | |
| **XVI.** | Dr. W.D.N Leetus | - | **$ 2441.87** | |
| **XVII.** | State Pharmaceuticals Corporation of Sri Lanka | - | **$ 21019.91** | |
| | **Total** | = | **$ 68344.395** | **€ 1435.53** |

# 10. வருடாந்த கணக்கு அறிக்கை

**ஹோமியோபதி மருத்துவச் சபை**

**31.12.2019ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான இறுதிக் கணக்கு**

**உள்ளடக்கங்கள்**

- கணக்கீட்டுக் கொள்கை
- 31 டிசம்பர் 2019ஆம் திகதியில் நிதி நிலமைக் கூற்று மற்றும் குறிப்புகள் (1 இருந்து 8 வரை)
- 31 டிசம்பர் 2019ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் குறிப்புகள் (1 இருந்து 8 வரை)
- 31 டிசம்பர் 2019ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான திரட்டிய காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் குறிப்புகள் (1 இருந்து 6 வரை)
- 31 டிசம்பர் 2019ஆம் திகதியில் சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கான அறிக்கை
- 31 டிசம்பர் 2019ஆம் திகதியில் பரீட்சை மீதி

# கணக்கியல் கொள்கைகள்

## கணக்குகளை சமர்ப்பித்தல்

இலங்கை அரச கணக்கியல் நியம (2009) இலக்கம் 1ற்கு அமைவாகவாகும். இது " தன்மையின் மீதான செலவு வகைப்பாட்டின் அடிப்படையில்" எனும் வகையில் வழங்கப்படுகின்றது. ஹோமியோபதி மருத்துவச் சபையின் மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினங்களை அரசின் நன்கொடையாகவும், சபை செய்யும் செலவையும் நன்கொடையாகவும் கருத்தில் கொண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### தேய்மானங்களை ஒதுக்குதல்

அனைத்து நிலையான சொத்துக்களுக்குமான தேய்மானம் குறைந்து செல்லும் மீதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

31.12.2019ம் திகதி வரையுள்ள அனைத்து சொத்துக்களும் 12% வீத தேய்மான வீதத்தில் தேய்மானம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அரச கணக்குகளுக்கான நியம் இலக்கம் 07 (24) ற்கு அமைவாக சொத்துக்களின் ஆகுசெலவு கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

31.12.2018ம் திகதி வரை சொத்துக்கள் தொடர்பாக, வருடத்தில் எத்தினத்தில் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், அதற்கான தேய்மானம் முழு வருடத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

2019ம் ஆண்டுக்கு சொத்துக்கள் எதுவும் கொள்வனவு செய்யப்படவில்லை.

சொத்துக்கள் எத்தினத்தில் அகற்றப்பட்ட போதிலும், முழு வருடத்திற்கும் தேய்மானம் வழங்கப்படமாட்டாது.

### பணிக்கொடைக்கான ஒதுக்கு

1983ஆம் ஆண்டு 12ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின்படி, ஐந்தாண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த அலுவலர்கள் பணிக்கொடை பெறத் தகுதியுடையவர்கள் மற்றும் சட்டத்தின் படி, ஐந்தாண்டுகளுக்கு மேல் பணிபுரிந்த அலுவலர்களுக்கு மட்டுமே பணிக்கொடைக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் கீழ் 2019ம் ஆண்டுக்கு புதிதாக தகுதிபெற்ற அலுவலர்கள் எவருமில்லை.

**ஹோமியோபதி மருத்துவச் சபை**
**2019.12.31ம் திகதியன்று நிதி நிலமைக்கூற்று**

| | குறிப்பு | 2019 (ரூ.) | 2018 (ரூ.) |
|---|---|---|---|
| சொத்து | | | |
| நடைமுறைச் சொத்து | | | |
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | 1 | 2,511,862 | 2,404,226 |
| நடைமுறையல்லாச் சொத்து | | | |
| பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 2 | 1,871,388 | 2,126,578 |
| கட்டட புனருத்தாபனம் | | 5,407,281 | 5,407,281 |
| வேறு உபகரணங்கள் | | 1,450 | 1,450 |
| | | **7,280,119** | **7,535,309** |
| முழுச் சொத்து | | **9,791,981** | **9,939,535** |
| பொறுப்பு | | | |
| நடைமுறைச் சொத்து | | | |
| கொடுப்பனவு செய்ய வேண்டியது | 3 | **1,135,643** | **1,141,508** |
| நடைமுறையல்லாச் சொத்து | | | |
| மொத்த சொத்து | | 1,135,643 | 1,141,508 |
| தேறிய சொத்து | | 8,656,338 | 8,798,027 |
| | | **9,791,981** | **9,939,535** |
| தேறிய சொத்து/ மூலதனம் | | | |
| மூலதனம் | | 2,562,144 | 2,562,144 |
| அரச மூலதன ஒதுக்கீடு | | 7,502,334 | 7,502,334 |
| கூட்டு பற்றாக்குறை/ மேலதிகம் | 4 | (1,377,724) | (1,236,035) |
| கடந்த வருடத்திற்கு சீராக்கல் கணக்கு | | (30,416) | (30,416) |
| | | **8,656,338** | **8,798,027** |

இந்த நிதிக் கூற்றினைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்கான பொறுப்பு ஹோமியோபதி மருத்துவச் சபையினால ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றோம்

| ...................... | .............................. | ...................... | ........................ |
|---|---|---|---|
| பதிவாளர் | தலைவர் | குழு அங்கத்தவர் | தயாரித்தவர் |
| ஹோமியோபதி | ஹோமியோபதி | ஹோமியோபதி | கே.எஸ்.பியசிறி |
| மருத்துவச் சபை | மருத்துவச் சபை | மருத்துவச் சபை | ஒய்வுபெற்ற பிரதான கணக்காளர் |
| | | | சுதேச வைத்திய அமைச்சு |

| குறிப்பு 1 | 2019 (ரூ.) | 2018 (ரூ.) |
|---|---|---|
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | | |
| கொமர்'ல் வங்கி | 1,874,489 | 1,787,553 |
| இலங்கை வங்கி | 441,473 | 420,773 |
| இலங்கை வங்கி இராஜகிரிய | 195,900 | 195,900 |
| | **2,511,862** | **2,404,226** |
| **குறிப்பு 2** | | |
| பொறிகள் மற்றும் உபகரணங்கள் | | |
| பொறிகள் மற்றும் உபகரணங்கள் (கொள்வனவு விலை) | 3,800,150 | 3,800,150 |
| கழிக்கவும் | | |
| கூட்டு மீதி | (1,928,762) | (1,673,572) |
| தேறிய பெறுமதி | **1,871,388** | **2,126,578** |
| **குறிப்பு 3** | | |
| கொடுப்பனவு செய்ய வேண்டியது | | |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் | 179,010 | 163,861 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்காளர் கட்டணம் | 42,000 | 42,000 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய தொலைபேசிக் கட்டணம் | 3,997 | 5,742 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய மின்சாரக் கட்டணம் | 5,386 | 4,408 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய தண்ணீர்க் கட்டணம் | 20,292 | 9,526 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய பணிக்குழு சம்பளம் மற்றும் கொடுப்பனவு | 8,500 | 62,291 |
| கொடுப்பனவு செய்ய சேமலாப நிதி | - | 3,590 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய ஊழியர் நம்பிக்கை நிதியம் | - | 898 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய பணிக்கொடை | 840,650 | 840,650 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய பயணச் செலவு | 28,691 | 6,697 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய சிகிச்சை நிலையச் செலவு | 5,117 | 1,845 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய சோலை வரி | 2,000 | - |
| | **1,135,643** | **1,141,508** |
| குறிப்பு 04 | | |
| 01.01.2019 அன்று திரட்டிய மிகை/ பற்றாக்குறை மீதி | (1,236,035) | (1,236,035) |
| சேர்க்க | | |
| 2019 வருட செயலாற்றுகையின் மிகை / பற்றாக்குறை | (141,689) | |
| | (1,377,724) | (1,236,035) |

குறிப்பு 5

கணக்கினைச் சமர்ப்பித்தல்

இலங்கை அரச நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியம (2009) இலக்கம் - 1ற்கு அமைவாக.

குறிப்பு 6

தேய்மானங்களை ஒதுக்குதல்

அனைத்து நிலையான சொத்துக்களுக்குமான தேய்மானம் குறைந்து செல்லும் மீதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

31.12.2019ம் திகதி வரையுள்ள அனைத்து சொத்துக்களும் 12% வீத தேய்மான வீதத்தில் தேய்மானம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அரச கணக்குகளுக்கான நியம் இலக்கம் 07 (24) ற்கு அமைவாக சொத்துக்களின் ஆகுசெலவு கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

31.12.2018ம் திகதி வரை சொத்துக்கள் தொடர்பாக, வருடத்தில் எத்தினத்தில் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும், அதற்கான தேய்மானம் முழு வருடத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

2019ம் ஆண்டுக்கு சொத்துக்கள் எதுவும் கொள்வனவு செய்யப்படவில்லை. சொத்துக்கள் எத்தினத்தில் அகற்றப்பட்ட போதிலும், முழு வருடத்திற்கும் தேய்மானம் வழங்கப்படமாட்டாது.

குறிப்பு 7

பணிக்கொடைக்கான ஒதுக்கு

2019ஆம் ஆண்டுக்கு 1983ஆம் ஆண்டு 12ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்திற்கு அமைவாக புதிதாக தகைமை பெற்ற அலுவலர்கள் எவருமில்லை.

குறிப்பு 8

2019ஆம் ஆண்டு சபைக்கு எதிராக 3 வழக்குகள் கோப்பிடப்பட்டுள்ளதுடன், அவை கீழ்வருவனவாகும்.

i CA/87/13 இலக்க மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைவாக புதிய ஹோமியோபதி சட்டம் தொடர்பாக, தீர்மானங்களை இரத்துசெய்தல் என்பவற்றுக்கு எதிராக கௌரவ மீயுயர் நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்ட மேன்முறையீடு விவாதத்திற்கு எடுக்கப்பட்டள்ளது.

ii மருத்துவ சபைக் காரியாலயத்தில் தற்காலிக அடிப்படையில் சேவையாற்றிய தொழிலாளியின் சேவையை இடைநிறுத்தியதற்கு எதிராக மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளுமாறு தொழில் நீதிமன்றத்தில் சாட்டப்பட்டுள்ள 30/52/2021 ம் இலக்க வழக்கு மற்றும் இந்த முறைப்பாட்டாளரினால் நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் சாட்டப்பட்டுள்ள 13593ஆம் இலக்க நட்டவீட்டுக் கோரிக்கை வழக்குகள் விவாதத்திற்கு எடுக்கப்பட்டுள்ளன.

iii வைத்தியர்களின் பெயர் ஆவணத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு எதிராக ஹோமியோபதி வைத்திய சபை மற்றும் அதன் பதிவாளரை பதிலளிப்பாளர்களாக்கி நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில கோப்பிடப்பட்டுள்ள 14328ஆம் இலக்க வழக்கு விவாதத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**ஹோமியோபதி மருத்துவச் சபை**
**2019.12.31ம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

| | குறிப்பு | 2019 (ரூ.) | 2018 (ரூ.) |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| அரச மீண்டுவரும் ஒதுக்கீடு | | 21,273,216 | 15,632,730 |
| ஏனைய வருமானம் | 1 | 20,700 | 47,850 |
| வங்கி வட்டி | | 91,505 | 87,001 |
| முழு வருமானம் | | **21,385,421** | **15,767,581** |
| செலவு | | | |
| சம்பளம் மற்றும் ஏனைய ஊழியர் நன்மைகள் | 2 | 19,682,529 | 13,468,291 |
| வழங்கல் மற்றும் நுகர்வுப் பண்டங்கள் | 3 | 746,148 | 71,356 |
| தேய்வு மற்றும் தேய்வு முறை | | 255,190 | 201,976 |
| ஏனைய செலவுகள் | 4 | 838,674 | 2,332,399 |
| சட்டக்கட்டணம் | | 4,569 | 5,132 |
| நிதி ஆகுசெலவு (வங்கிக் கட்டணம்) | | | |
| மொத்தச் செலவு | | **21,527,110** | **16,079,154** |
| பற்றாக்குறை / மிகை | | (114,689) | (311,573) |

இந்த நிதிக் கூற்றினைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்கான பொறுப்பு ஹோமியோபதி மருத்துவச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றோம்

| | | | |
|---|---|---|---|
| ...................... | ............................. | ...................... | ........................ |
| பதிவாளர் | தலைவர் | குழு அங்கத்தவர் | தயாரித்தவர் |
| ஹோமியோபதி | ஹோமியோபதி | ஹோமியோபதி | கே.எஸ்.பியசிறி |
| மருத்துவச் சபை | மருத்துவச் சபை | மருத்துவச் சபை | ஒய்வுபெற்ற பிரதான |
| | | | கணக்காளர் |
| | | | சுதேச வைத்திய அமைச்சு |

| குறிப்பு 1 | 2019 (ரூ.) | 2018 (ரூ.) |
| --- | --- | --- |
| வேறு வருமானங்கள் | | |
| வருடாந்தக் கட்டணம் | 10,450 | 26,350 |
| வேறு பெறுவனவுகள் | 10,250 | 21,500 |
| | **20,700** | **47,850** |
| குறிப்பு 2 | | |
| சம்பளம் மற்றும் ஊழியர் நன்மைகள் | | |
| பணிக்குழு சம்பளம் மற்றும் கொடுப்பனவு | 17,129,036 | 11,749,368 |
| ஊழியர் சேம இலாப நிதி | 2,042,796 | 1,375,138 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 510,697 | 343,785 |
| | **19,682,529** | **13,468,291** |
| குறிப்பு 3 | | |
| வழங்கல் மற்றும் நுகர்வு பண்டங்கள் | | |
| எழுதுகருவிகள் | 8,007 | 17,708 |
| உபசரணைச் செலவு | 22,775 | 53,648 |
| தொலைபேசிக் கட்டணம் | 532,000 | _ |
| மருத்துவ சிகிச்சை நிலையச் செலவு | 183,366 | _ |
| | **746,148** | **71,356** |
| குறிப்பு 4 | | |
| ஏனைய செலவுகள் | | |
| கணக்காளருக்கான கட்டணம் | 42,000 | 42,000 |
| கணக்காய்வுக் கட்டணம் | 200,733 | 20,000 |
| தொலைபேசிக் கட்டணம் | 62,509 | 83,744 |
| மருந்து நிலையக் கட்டணங்கள் | 44,935 | 13,126 |
| மின்சாரக் கட்டணம் | 97,010 | 68,806 |
| நீர்க் கட்டணம் | 80,080 | 44,958 |
| பயணச் செலவு மற்றும் தங்குமிடச் செலவு | 79,617 | 49,972 |
| எரிபொருள் செலவு | - | 11,000 |
| தபால் செலவு | 15,185 | 20,785 |
| அச்சிடுதல் கட்டணம் | 23,718 | 120,526 |
| வைத்திய சபைக்கான நானவித செலவுகள் | 4,825 | 26,522 |
| மொழிபெயர்ப்புக் கட்டணம் | 60,715 | 30,260 |
| தலைவருக்கான கொடுப்பனவு | | 725,000 |
| இடைக்கால வைத்திய சபைக்கூட்டக் கொடுப்பனவு | - | 306,000 |
| பத்திரிகை அறிவித்தல் கட்டணம் | - | 308,200 |
| இழப்பீட்டுக் கொடுப்பனவு | - | 343,036 |
| போக்குவரத்துச் செலவு | | 1,780 |

| | | |
|---|---|---|
| சோலைவரி | 2,000 | 1,884 |
| வாடகைச் செலவு | - | 36,000 |
| சட்டச் செலவு | 113,500 | 78,800 |
| புதுப்பித்தல் செலவு | 11,847 | |
| | **838,674** | **2,332,399** |

குறிப்பு 5

கணக்கினைச் சமர்ப்பித்தல்

இலங்கை அரச நிறுவனங்களுக்கான கணக்கீட்டு நியமங்கள் (2009) இலக்கம் - 1ற்கு அமைவாக. சொத்துக்களின் தன்மை வகைப்படுத்தலுக்கு அமைவாக ஆகுசெலவு கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பு 6

2019ம் ஆண்டுக்கான கணக்காய்வுக் கட்டணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

குறிப்பு 7

பணிக்கொடைக்கான ஒதுக்கு

2019ஆம் ஆண்டுக்கு 1983ஆம் ஆண்டு 12ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்திற்கு அமைவாக புதிதாக தகைமை பெற்ற அலுவலர்கள் எவருமில்லை.

குறிப்பு 8

ஹோமியோபதி வைத்தி சபையின் மீண்டுவரும் மற்றும் மூலதன செலவுகளுக்கு அரசியால் கிடைக்கப்பெற்ற ஒதுக்கீடு சபைக்கு கிடைக்கப்பெற்ற நன்கொடையாகவும் அதேபோல் நன்கொடையில் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் சபையின் செலவாகவும் கருதப்பட்டு இறுதிக் கணக்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

## ஹோமியோபதி மருத்துவச் சபை
## 31 டிசம்பர் 2019ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான திரட்டிய நிதி காசுப்பாச்சல் கூற்று

| | குறிப்பு | 2019 (ரூ.) | 2018 (ரூ.) |
|---|---|---|---|
| தொழிற்பாட்டு செயற்பாடுகளின் ஊடாக நிதிப் பாச்சல் | | | |
| **கிடைப்பனவு** | | | |
| அரசினால் வழங்கப்பட்ட மீண்டுவரும் நன்கொடை | | 21,273,216 | 15,632,730 |
| வங்கி வட்டி | | 91,505 | 87,001 |
| ஏனைய கொடுப்பனவுகள் | 1 | 20,700 | 47,850 |
| | | **21,385,421** | **15,767,581** |
| **கொடுப்பனவு** | | | |
| ஊழியர் செலவு | 2 | 19,740,807 | 13,509,715 |
| வங்கி வட்டி ( வங்கிக் கட்டணம்) | | 4,569 | 5,132 |
| வேறு கொடுப்பனவுகள் | 3 | 1,532,409 | 2,123,015 |
| | | **21,277,785** | **15,637,862** |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளின் ஊடான தேறிய நிதிப் பாச்சல் | | 107,636 | 129,719 |
| முலதன செயற்பாடுகளின் ஊடான நிதிப் பாச்சல் | | | |
| அரச நிதி மூலதன நன்கொடை | | | 1,824,409 |
| கட்டட புனருத்தாபனம் | | | 1,179,775 |
| ஆதனம் மற்றும் பொறிகள் | | | 644,634 |
| முதலீட்டு செயற்பாடுகளின் ஊடான தேறிய நிதிப் பாச்சல் | | | |
| காசு மற்றும் காசுக்கு சமனானவையினால் தேறிய அதிகரிப்பு | 4 | 107,636 | 129,719 |
| ஆரம்ப காசு மற்றும் காசுக்கு சமனானவை | 5 | 2,404,226 | 2,274,507 |
| இக்காலத்தின் ஆரம்பத்தில் காணப்பட்ட காசு மற்றும் காசுக்கு சமனானவை | 6 | **2,511,862** | **2,404,226** |

இந்த நிதிக் கூற்றினைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலுக்கான பொறுப்பு ஹோமியோபதி மருத்துவச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றோம்

| | | | |
|---|---|---|---|
| ........................ | ...................... | ...................... | ...................... |
| பதிவாளர் | தலைவர் | குழு அங்கத்தவர் | தயாரித்தவர் |
| ஹோமியோபதி | ஹோமியோபதி | ஹோமியோபதி | கே.எஸ்.பியசிறி |
| மருத்துவச் சபை | மருத்துவச் சபை | மருத்துவச் சபை | ஓய்வுபெற்ற பிரதான கணக்காளர் |
| | | | சுதேச வைத்திய அமைச்சு |

| | 2019 (ரூ.) | 2018 (ரூ.) |
|---|---|---|
| குறிப்பு 1 - வேறு வருமானங்கள் | | |
| வருடாந்தக் கட்டணம் | 10,450 | 26,350 |
| நானாவித வருமானம் | 10,250 | 21,500 |
| | **20,700** | **47,850** |
| குறிப்பு 2 – ஊழியர் செலவு | | |
| பணிக்குழு சம்பளம் மற்றும் கொடுப்பனவு | 17,182,827 | 11,785,936 |
| ஊழியர் சேம இலாப நிதி | 2,046,384 | 1,379,023 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 511,596 | 344,756 |
| | **19,740,807** | **13,509,715** |
| குறிப்பு 3 – ஏனைய கொடுப்பனவு | | |
| நானாவிதச் செலவுகள் | | |
| கணக்காய்வுக் கட்டணம் | 185,584 | - |
| தொலைபேசிக் கட்டணம் | 64,254 | 83,644 |
| மருத்துவ முகாமுக்கான நானாவிதச் செலவு | 4,825 | 26,522 |
| மின்சாரக் கட்டணம் | 96,031 | 68,695 |
| நீர்க் கட்டணம் | 69,315 | 50,507 |
| பயணச் செலவு | 57,623 | 43,275 |
| எரிபொருள் செலவு | | 11,000 |
| தபால் கட்டணம் | 15,185 | 20,785 |
| அச்சிடுதல் கட்டணம் | 23,718 | 120,526 |
| எழுதுகருவி | 8,007 | 17,708 |
| உபசரணைச் செலவு | 22,776 | 53,648 |
| மொழிபெயர்ப்புக் கட்டணம் | 60,715 | 30,260 |
| அடையாள அட்டை வழங்கல் செலவு | - | - |
| தலைவருக்கான கொடுப்பனவு | - | 800,000 |
| இடைக்கால வைத்திய சபை அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவு | - | 306,000 |
| அறிவித்தல் கட்டணம் | - | 308,200 |
| அலுவலக சிறிய புதுப்பித்தல் | 11,847 | - |
| சோலைவரி | - | 1,884 |
| சிகிச்சை நிலையச் செலவு | 41,663 | 11,281 |
| வாடகை | - | 36,000 |
| சட்டச் செலவு | 113,500 | 131,300 |
| போக்குவரத்து | - | 1,780 |
| மருந்துக் கொள்கலன்களைக் கொள்வனவு செய்வதற்கான செலவு | 532,000 | - |
| மருந்துப் கொள்கலன் உறைகளைக் கொள்வனவு செய்வதற்கான செலவு | 183,366 | - |
| கணக்காளர் கட்டணம் | 42,000 | - |
| | **1,532,409** | **2,123,015** |
| குறிப்பு 4 காசு மற்றும் காசுக்கு சமனானவை தேறிய அதிகரிப்பு | | |
| வருடத்தின் இறுதியில் காசு மீதி | 2,511,862 | 2,404,226 |
| வருடத்தின் ஆரம்பத்தில் காசு மீதி | 2,404,226 | 2,274,507 |
| | **107,636** | **129,719** |

| | | |
|---|---|---|
| குறிப்பு 5 – காலத்தின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமனானவை | | |
| கொமர்ஷல் வங்கி | 1,787,553 | 1,702,684 |
| இலங்கை வங்கி | 420,773 | 375,923 |
| இலங்கை வங்கி - இராஜகிரிய | 195,900 | 195,900 |
| | **2,404,226** | **2,274,507** |
| குறிப்பு 6 – காலத்தின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமனானவை | | |
| கொமர்ஷல் வங்கி | 1,874,489 | 1,787,553 |
| இலங்கை வங்கி | 441,473 | 420,773 |
| இலங்கை வங்கி - இராஜகிரிய | 195,900 | 195,900 |
| | **2,511,862** | **2,404,226** |
| | **107,636** | **129,719** |
| பொது செயற்பாடுகளின் மீதான தேறிய மிகை / பற்றாக்குறை தொழிற்பாடுகளின் செயற்பாடுகளின் மீதான தேறிய காசு பாச்சல் உடன் சீராக்கல் | | |
| பொது செயற்பாடுகளின் மீதான தேறிய மிகை / பற்றாக்குறை | (141,689) | (311,573) |
| தொழிற்பாடுகளின் செயற்பாடுகளின் மீதான காசல்லா மாற்றங்கள் | | |
| தேய்வு | 255,190 | 201,976 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய செலவு அதிகரிப்பு / குறைவு | (5,865) | 297,192 |
| கடந்த வருடத்து இணக்கம் கணக்கில் வருடாந்த மாற்றம் அதிகரிப்பு/ குறைவு | - | (57,876) |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளின் மீதான தேறிய காசுப் பாய்ச்சல் | **107,636** | **129,719** |

**ஹோமியோபதி வைத்திய சபை**

| **உரிமை மாற்றம் - 2019** | **ஒதுக்கு ரூ** |
|---|---|
| 01.01.2019ஆம் திகதியில் மூலதனக் கணக்கு மீதி | 2,562,144 |
| 01.01.2019ஆம் திகதியில் மூலதன ஒதுக்கீட்டுக் கணக்கு மீதி | 7,502,334 |
| கடந்த வருட சீராக்கல் | -30,416 |
| கூட்டு பற்றாக்குறை / மிகை | -1,377,724 |
| **31.12.2019ஆம் திகதியன்று மீதி** | **8,656,338** |

# 31 டிசம்பர் 2019ஆம் திகதியில் பரீட்சை மீதி

| | செலவு | வரவு |
|---|---|---|
| வங்கி (கொமர்ஷல்) | 1,874,489 | |
| வேறு உபகரணம் | 1,450 | |
| பொறி மற்றும் உபகரணம் | 3,800,150 | |
| இலங்கை வங்கி | 441,473 | |
| இலங்கை வங்கி (இராஜகிரிய) | 195,900 | |
| தேய்மானத்தை ஒதுக்கல் | | 1,928,762 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் | | 179,010 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்காளர் கட்டணம் | | 42,000 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய தொலைபேசிக் கட்டணம் | | 3,997 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய மின்சாரக் கட்டணம் | | 5,386 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய நீர்க் கட்டணம் | | 20,292 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் | | 8,500 |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய பணிக்கொடைக் கொடுப்பனவு | | 840,650 |
| மூலதனம் | | 2,562,144 |
| அரசின் ஒதுக்கீட்டுக்கான ஏற்பாடு (ஒதுக்கு) | | 7,502,334 |
| ஒன்றுதிரட்டிய மிகை மற்றும் பற்றாக்குறைக் கணக்கு | 1,236,035 | |
| கடந்த வருடத்திற்கான இணக்கக் கணக்கு | 30,416 | |
| மீண்டும் வரும் செலவுகளுக்கான அரசின் ஒதுக்கீடு | | 21,273,216 |
| சம்பளம் மற்றும் படிகள் | 17,129,036 | |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய பயணச் செலவு | | 28,691 |
| ஊழியர் சேமலாப நிதி | 2,042,796 | |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் | 510,697 | |
| தொலைபேசிக் கட்டணம் | 62,509 | |
| மின்சாரக் கட்டணம் | 97,010 | |
| நீர்க் கட்டணம் | 80,080 | |
| சோலைவரிக் கட்டணம் | 2,000 | |
| சிகிச்சை நிலையக் கட்டணம் | 44,935 | |
| எழுதுகருவிக் கட்டணம் | 8,007 | |
| பயணச் செலவு மற்றும் தங்குமிடக் கட்டணம் | 79,617 | |
| உபசாரச் செலவு | 22,775 | |
| நானவிதச் செலவு | 4,825 | |
| தபால் செலவு | 15,185 | |
| அச்சகச் செலவு | 23,718 | |
| சட்டச் செலவு | 113,500 | |
| மொழிபெயர்ப்புக் கட்டணம் | 60,715 | |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய சிகிச்சை நிலையச் செலவு | | 5,117 |
| வங்கி வட்டி | | 91,505 |

| | | |
|---|---|---|
| பதிவுக் கட்டணம் | | 10,450 |
| நானாவித வருமானம் | | 10,250 |
| வருடாந்த தேய்மானம் | 255,190 | |
| கணக்காய்வுக் கட்டணம் | 200,733 | |
| கணக்காளர் கட்டணம் | 42,000 | |
| வங்கிக் கட்டணம் மற்றும் வரி | 4,569 | |
| புதுப்பித்தல் செலவு | 11,847 | |
| கொடுப்பனவு செய்ய வேண்டிய சோலை வரி | | 2,000 |
| மருந்துக் கொள்கலன் செலவு | 532,000 | |
| மருந்துக் கொள்கலன் உறைச் செலவு | 183,366 | |
| கட்டட மீண்டுவரும் மற்றும் புதுப்பித்தல் | 5,407,281 | |
| | | |
| | **34,514,304** | **34,514,304** |

# 11. தணிக்கை அறிக்கை

2019 ஆம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர் கவுன்சில் செயல்படாத ஆண்டாகும்இ எனவே கவுன்சிலின் செயல்பாட்டின் கீழ் மருத்துவமே செயல்படவில்லை. இதன் காரணமாகஇ மருத்துவ கவுன்சிலின் செயல்பாடுகள் அமைச்சரின் வழிகாட்டுதலின் கீழ் நடத்தப்பட்டுஇ மருத்துவ கவுன்சிலின் பதிவாளரால் செயல்படுத்தப்பட்டது. 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கைஇ நிதி செயல்திறன் அறிக்கைஇ ஒருங்கிணைந்த பணப்புழக்க அறிக்கை மற்றும் இருப்புநிலை அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில் 5 மாவட்டங்களில் 05 புதிய கிளினிக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 7 மாவட்டங்களில் பராமரிக்கப்பட்டு வந்த 07 கிளினிக்குகள் 12 கிளினிக்குகளாக விரிவுபடுத்தப்பட்டுள்ளன. 07 மருத்துவ நிபுணர்களை அரசாங்க ஹோமியோபதி வைத்திய அதிகாரிகளாக ஆட்சேர்ப்பு செய்வதற்கும் அத்துடன் 5 புதிய தொழிலாளர் பதவிகளுக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் இது ஒரு தனித்துவமான வாய்ப்பாகும்.

புதிய மருத்துவ கவுன்சில் 2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க ஹோமியோபதி சட்டத்தின்படி செப்டம்பர் 2020 இல் நிறுவப்பட்டது மற்றும் மருத்துவ கவுன்சிலின் முக்கிய நோக்கங்கள் நிறுவனத்தை பராமரிக்க தேவையான நிர்வாக மற்றும் நிதி நடவடிக்கைகளை மேற்கொள்வது மற்றும் மிகச் சிறந்த ஹோமியோபதி சேவையை மக்களுக்கு வழங்குவது ஆகும்.

மருத்துவர் டி. எம். அஷான் திலங்க
தலைவர்
ஹோமியோபதி மருத்துவர் கவுன்சில்

# நல்வாழ்த்துக்கள்

★ ★ ★ ★

கௌரவ சுதேச மருத்துவ அபிவிருத்தி, கிராமிய மற்றும் ஆயுர்வேத

வைத்தியசாலை அபிவிருத்தி மற்றும்

பொது சுகாதார அமைச்சர் திரு.சிசிர ஜெயக்கொடி

செயலாளர் மற்றும் மேலதிக செயலாளர்

ஹோமியொபதி வைத்திய சபையின் அங்கத்தவர்கள்

சட்டத் திணைக்களம்

கணக்காய்வாளர் திணைக்களம்

ஹோமியோபதி மருத்துவ சபையின் பதிவாளர்

மற்றும்

பணிக்குழுவினர்